# ஒரு பாடல் நான்

ஒரு பாடல் நான் பாடுவேன்
மன்னன் உந்தன் கருணையை
எண்ணி எண்ணி வியந்து மகிழ்ந்து
நன்றிப் பாடல் நான் பாடுவேன்

**1**
ஒரு நாளில் நீ செய்த நன்மைகளை
சொல்ல நினைத்தால் வாழ்நாளே போதாதையா
சொல்லியும் தீராதையா
நன்றி சொல்வேன் நாளெல்லாம்
உந்தன் பிள்ளையாய் நான் வாழ்வேன்

(ஒரு பாடல்)

**2**
என் அன்புத் தாயாகத் தந்தையாக
எந்தன் இறைவா எந்நாளும் எனைப் பார்க்கிறாய்
கண்ணாகக் காத்தாள்கிறாய்
நான் நினைப்பேன் நன்றி சொல்வேன்
நாளெல்லாம் பாடிப் புகழ்வேன்

(ஒரு பாடல்)